வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 01/2021

எனது இல : **NP/07/10/01/150**
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
08.01.2021

செயலாளர் - மகளிர் விவகார அமைச்சு,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள்,
வடக்கு மாகாணம்.

## வடக்கு மாகாண பொதுச்சேவையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், தரம் III பதவிக்கு சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021

வடக்கு மாகாண பொதுச்சேவையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தரம் III பதவிக்கு சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய வடக்கு மாகாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2021.01.22 ஆகும்.

**02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :-**

2.1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைவான சேவை நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

2.2 இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

2.3 இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

2.4 மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்கும் போது தங்களது விண்ணப்பப் படிவங்களை தமது திணைக்களத் தலைவரூடாக சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது மேலே குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு திணைக்களத் தலைவரினால் சிபாரிசு செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**03. சம்பள அளவுத்திட்டம் :-**

பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016ற்கு அமைவாக. (**SL** 1 - 2016) என்ற சம்பள வகுப்பின் **ரூபா. 47,615 – 10 x 1,335 – 8 x 1,630 – 17 x 2,170 – ரூபா. 110,895/-** ஆகும். 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும். (3வது சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்)

**04. ஆட்சேர்ப்பு செய்வதற்கான அடிப்படைத் தகைமைகள் :-**

**4.1 வயதெல்லை :-**
சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையிலான ஆட்சேர்ப்பின் போது உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

4.2 தகைமைகள் :

(அ). மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் குறைந்தது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு (22.01.2021) முன்னர் உடன் முன்வரும் **மூன்று** (03) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதுடன் உரிய **மூன்று** (03) சம்பள ஏற்றத்தினையும் உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ). அனுமதிக்கப்பட்ட செயற்பாட்டுத்திறன் கணிப்புத் திட்டத்திற்கு அமைவாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு (22.01.2021) முன்னர் உடன் முன்வரும் **மூன்று** (03) வருட காலத்தினுள் திருப்பிகரமான மட்டம் அல்லது அதற்கு மேல் மட்டத்திலான செயற்பாட்டுத் திறனைப் பெற்றிருத்தல் வேண்டும்.

05. பொதுவான தகைமை :-

விண்ணப்பதாரிகள் மேலே குறிப்பிட்ட பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

06. ஆட்சேர்ப்பு முறை :-

6.1. வடக்கு மாகாணத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பதவிக்கு அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம், அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள், தாபன விதிக்கோவை, மாகாண கொள்கைகள் மற்றும் விளம்பரத்தின் **பந்தி 10** இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். அத்துடன் விண்ணப்பதாரிகள் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

6.2. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பதவிக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கேற்ப திறமை அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை மூலமாக பதவியுயர்த்தப்படுவர்.

6.3. அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு (22.01.2021) முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு (22.01.2021) முன்னர் கேட்கப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் தகைமையற்றவர்களின் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

07. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ, கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம். மேலே **6.3 பந்தியில்** கூறப்பட்ட விடயங்களை விண்ணப்பதாரிகள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

08. விண்ணப்பிக்கும் முறை :-

8.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் மட்டும் உபயோகித்து, இல 01 தொடக்கம் 11 வரை முதலாம் பக்கத்திலும், இல. 12 தொடக்கம் 15 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

8.2. உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், சரியான முறையில் பூரணப்படுத்தப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.3. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **"கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், தரம் III பதவிக்கு சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2021"** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

8.4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **2021 ஜனவரி மாதம்** 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**09.** விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிருபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேணடும்.

(i) *ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை*
(ii) *செல்லுபடியான கடவுச்சீட்டு.*
(iii) *செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்*

**10. கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை:-**

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக புள்ளிகள் வழங்கப்படும். - **(மொத்தம் 100 புள்ளிகள்)**

| இல | புள்ளிகள் வழங்கப்படும் விடயப் பரப்புக்கள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01. சேவைமூப்பு | | |
| 01.1 | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் மாவட்ட அலுவலராக உள்ள சேவைக் காலத்திற்கு வருடத்திற்கு $7^1/_2$ புள்ளிகள் வீதம் கூடிய பட்சம் 10 வருடங்களுக்கும் மற்றும் அதன் பகுதிக்கும் | 75 புள்ளிகள் |
| 02. செயலாற்றுகை | | |
| 02.1 | பதில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலராக / பதில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய ஒவ்வொரு வருடத்திற்கும் 01 புள்ளி வீதம். | 05 புள்ளிகள் |
| 02.2 | கஷ்டப் பிரதேசத்தில் வேலை செய்த காலத்தினுள் பெறப்பட்ட பாராட்டுக்களுக்காக 01 புள்ளி வீதம் கூடிய பட்சம் 05 புள்ளிகள் | 05 புள்ளிகள் |
| 02.3 | ஒழுக்காற்று விசாரணை அதிகாரியாக / மோசடி அல்லது அதிகார துஸ்பிரயோகம் தொடர்பான விசாரணை அதிகாரியாக கடமையாற்றியிருத்தல் | 05 புள்ளிகள் |
| 03. விசேட தகைமைகள் | | |
| 03.1 | பட்டப்படிப்பிற்கு சமனான விடயத்தில் உயர் படிப்புத் தகைமை | 05 புள்ளிகள் |
| 03.2 | தொடர்புடைய விடயத்தில் டிப்ளோமா சான்றிதழ் ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் கூடிய பட்சம் 03 சான்றிதழ்கள் | 03 புள்ளிகள் |
| 03.3 | தாய் மொழியான தமிழ் / சிங்களம் தவிர்ந்த ஏனைய மொழியில் பெற்றுக்கொண்ட திறமை 01 புள்ளி வீதம் (எழுத்து மற்றும் பேச்சு) | 02 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

**11.** இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்மந்தமாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

**12.** சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது சம்பந்தமான முடிவு நியமன அதிகாரியாலேயே தீர்மானிக்கப்படும்.

**சி.திருவாகரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
08.01.2021